DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 75/2024** |
| Deposition of Witness for | : PW 7 |
| Name | : சி.செல்வகுமார் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 09.01.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 9th January 2026.

1ம் **எதிரி ஆஜர். 2,5,6 எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது திருநெல்வேலி மாநகரம் ஒருங்கிணைந்த குற்றப்பிரிவு சிபிசிஐடி காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 06.12.2013ம் தேதி சின்னகோவிலான்குளம் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது சின்னகோவிலான்குளம் காவல்நிலைய தலைமைக்காவலர் பாலகணேசன் என்பவர் பதிவு செய்து வைத்திருந்த குற்ற எண்.176/13 என்ற வழக்கை எனதுவிசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடத்திற்கு 06.12.2013ம் தேதி 19.00 மணிக்கு சென்று சாட்சிகள் முருகன், முத்துராஜ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை டார்ச் லைட் விளக்கு வைத்து பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். மேற்படி மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு சாட்சிகள் முத்துராஜ் மற்றும் முருகன் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் கடலாட்சி, சண்முகையா, பரமசிவன் மற்றும்

முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்த பாலகணேசன் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எனது விசாரணையில் எதிரி காட்டுராஜா, மாரியம்மாள், பொன்னுத்தாய், அன்னத்தாய், வள்ளி, சீனியம்மாள் ஆகியோர்கள் சம்பவ இடத்தில் வைத்து ஆபாசமாக பேசி எதிரி காட்டுராஜா கம்பை கொண்டு புகார்தாரர் தலையில் அடித்து மற்ற எதிரிகள் கீழே இழுத்துபோட்டு காலால் மிதித்து காயம் ஏற்படுத்தி கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்று தெரியவந்ததால் எதிரியை தேடிவந்த நிலையில் 08.12.2013ம் தேதி 11.00 மணிக்கு குருக்கள்பட்டி பஸ்ஸ்டாப்பில் வைத்து எதிரி காட்டுராஜாவை கைது செய்து நிலையம் கொண்டு வந்து நீதிமன்றக்காவலுக்கு அனுப்பிவைத்தேன். இவ்வழக்கில் மற்ற எதிரிகள் முன்பிணை பெற்றுவிட்டதால் அவர்களை கைது செய்யவில்லை. பின்பு காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சங்கரி என்பவரை 17.12.2013 அன்று விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்றிதழ் பெற்றேன். அத்துடன் வழக்கு விசாரணை முடித்து எதிரிகள் மீது இதச சட்டப்பிரிவு 147, 294(பி), 323, 506(2) ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

அ.சா.1 கடலாட்சி எனதுவிசாரணையில் 6 எதிரிகளும் கையில் வேலி கம்பு வைத்திருந்ததாக கூறினாரா என்றால் இல்லை. அ.சா.1 கடலாட்சி எனதுவிசாரணையில் 6 எதிரிகளும் தன்னை மண்டையில் அடித்து காயப்படுத்தியதாக கூறினாரா என்றால் இல்லை. 1ம் எதிரி மட்டும் தலையில் அடித்து காயப்படுத்தியதாக கூறியுள்ளார். மருத்துவர் சங்கரி அ.சா.1 கடலாட்சிக்கு இடுப்பில் காயம் இருப்பதாக எனது விசாரணையில் கூறினாரா என்றால் இல்லை. கடலாட்சியின் இடத்திற்கு அருகில் உள்ள பொன்னுகோனார் என்பவரின் இடத்தில் எதிரிகள் பாடுபட்டு வந்ததார்கள் என்றால் சரிதான். மேற்படி பொன்னுக்கோனார் இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கப்பட்டுள்ளாரா என்றால் இல்லை. மாதிரி வரைபடத்தில் வரப்பு மற்றும் தென்னங்கன்று ஆகியவை குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். கடலாட்சி என்பவரின் இடத்திற்கு அருகில் பொன்னுக்கோனாரின் இடம் உள்ளதாக மாதிரி வரைபடத்தில் தெரிவிக்கப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி பொன்னுக்கோனாரின் இடம் எதிரி காட்டுராஜாவின் நிலம் என்று

குறிப்பிடப்பட்டுள்ளது. விபத்து பதிவேட்டில் கடலாட்சியை தாக்கியதாக சொல்லப்படும் 6 தெரிந்த நபர்களுள் எத்தனை நபர்கள் பெண்கள் என்றும், எத்தனை நபர்கள் ஆண்கள் என்றும் குறிப்பிட்டு கூறப்படவில்லை என்றால் சரிதான். சம்பவமானது 06.12.2013ம் தேதி காலை 11 மணிக்கு நடந்ததாக குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் கடலாட்சி 06.12.2013ம் தேதி மதியம் 2.20 மணிக்கு சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் சிகிச்சை சென்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 06.12.2013ம் தேதி காலை 11 மணி முதல் மதியம் 2.20 மணி வரை சின்னகோவிலான்குளம் காவல்நிலையத்தில் கடலாட்சி புகார் எதுவும் அளித்தாரா என்றால் இல்லை. எதிரிகளால் பயன்படுத்தப்பட்டதாக சொல்லப்படும் கம்புகளை கைப்பற்றியுள்ளேனா என்றால் இல்லை. நான் கூறிய நாள் நேரத்தில் மருத்துவமனைக்கு சென்று அ.சா.1 யிடம் புகார் வாக்குமூலம் பதிவு செய்யப்படவில்லை என்றாலும், சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யப்படவில்லைஎ ன்றாலும், நான்கூறியவாறு அரசுதரப்பு பட்டியல் சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்யவில்லை என்றாலும், நான் கூறியவாறு 1ம் எதிரி கைது செய்யப்படவில்லை என்றாலும், எனது விசாரணை ஒருதலைபட்சமானது என்றாலும், எதிரிகளுக்கும், இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**